**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 324/2024**

திரு.விஜயக்குமார் (D.W –1) **11.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்காக வாதியுடன் என்ன கிரைய தொகை பேசி முடிவு செய்யப்பட்டது என்றால் ரூ. 12,08,000/–என்று முடிவு செய்யப்பட்டது.அந்தத் தொகையில் வங்கி பரிமாற்றம் மூலம் எந்த தேதியில் எவ்வளவு வாதிக்கு அனுப்பினேன் என்றால் 19.04.2023 ல் வங்கி பரிமாற்றம் மூலம் ஒரு லட்சம் அனுப்பினேன். 19.05.2023 ம் தேதியில் ரூபாய் 70 ஆயிரம் வங்கி பரிமாற்றம் மூலம் அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரி. அதன் பிறகு மீதித் தொகைக்காக காசோலை வழங்கினேன் என்றால் சரி. அந்த காசோலை எண். என்ன என்றால் corporation வங்கி காசோலை எண்.031240.

2. அதன் பிறகு மீதி ஒரு லட்சம் எங்கு வைத்து வாதிக்கு செலுத்தினீர்கள் என்றால் மீதம் உள்ள ஒரு லட்சத்தை என்னுடைய அலுவலகத்தில் வாதி மற்றும் அவர் மகன் முன்னிலையில் 2024 ஆம் வருடம் தீபாவளி மாதத்தில் கொடுத்தேன். இந்த சங்கதிகள் எதிர் வழக்குரையில் வாதுரைக்கப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அந்தத் தொகைக்கு வாதியிடம் இருந்து ரசீது பெற்றீர்களா என்றால் இல்லை, ரசீது வாதி கொடுக்கவில்லை. நீங்கள் ரசீதை எழுதி வாங்கிக் கொண்டீர்களா என்றால் எழுதி வாங்கிக் கொள்ளவில்லை. அதன் பிறகு வாதிக்கு ரூ.2,70,000/– செலுத்தியதற்கு எழுத்துப்பூர்வமான தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. ஒரு லட்ச ரூபாய் திருப்பி செலுத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.ஆவணங்கள் நான் வாங்கவில்லை.

3. 24.12.2023 தேதியில் ரூ.10,000/-, 28.12.2023 தேதியில் ரூ.15,000/-, 14.01.2024 ல் ரூ.10,000/- 12.06.2024 ல் ரூ.2,70,000/- செலுத்தினேன் என்பதற்கு கிரைய ஆவணத்திலோ வேறு ஆவணத்திலோ அவ்வாறு தொகை கொடுத்தாக குறிப்பிட்டு வாதியிடம் கையொப்பம் பெற்றீர்களா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். இந்த விவரங்களை எதிர்வழக்குரையில் வாதுரைத்துள்ளீர்களா என்றால் சொல்லப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் எந்த பத்தியில் சொல்லப்பட்டுள்ளது என்று கேட்டபோது எதிர்வழக்குரையின் 4 வது பத்தியில் அந்த விவரங்கள் முழுமையாக சொல்லப்பட்டுள்ளது. மேலே சொன்ன தொகைகள் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்காக கொடுக்கவேண்டியற்காக சொல்லப்பட்டுள்ளதா என்றால் 4 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ளது. கிரைய தொகைக்காக வரவு வைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் தாவா சொத்திற்குரிய கிரைய தொகை முழுவதும் செலுத்திவிட்டதாக சொல்லிவிட்டார். வாதிக்கும் எனக்கும் தாவா கிரையத்தொகையை பொறுத்துதான் பரிமாற்றம் இருந்தது. கிரைய தொகையில் வாதிக்கு 4 லட்சம் திருப்பி செலுத்தவேண்டி இருந்தது, வாதி பிரதிவாதியிடம் பணம் கேட்கும்போதெல்லாம் அவரை ஏமாற்றும் நோக்கில் அவருக்கு ரூ.5,000/-, ரூ.10,000/-, ரூ.15,000/- கொடுத்து செலவுக்கு வைத்துக்கொள்ளுபடியும், சீக்கிரம் பணம் கொடுப்பதாக சொல்லி 4 லட்சம் எங்கே போய்விடப்போகிறது என்று ஒவ்வொரு முறையும் வாதியை சமாதனம்ப்படுத்தி விட்டீர்கள் என்றால் பணம் கொடுத்தது உண்மைதான்.

4. பொதுவாக சிறிய தொகைகளை நான் ஆன்லைனில் அனுப்புவேன் என்றால் சரி. இந்த சூழ்நிலையில் மீதி கிரைய தொகையான 4 லட்சம் கையில் ரொக்கமாக கொடுத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நேரில் கொடுத்தேன். வாதி தாவாவில் கோரியவாறு மீதி கிரைய தொகையை செலுத்தாமல் வாதியை ஏமாற்ற பார்க்கிறேன் என்றால் தவறு. மீதி கிரைய தொகையை தாவாவில் கோரியுள்ளபடி செலுத்திவிட்டதாக சொல்வதை பிரதிவாதியாகிய நான் நிரூவனம்

செய்யவேண்டும் என்றால் சரி. ஆனால் ஆவணங்கள் அதற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மீதி கிரைய தொகையை வாதிக்கு கொடுக்காமல் கொடுத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.